# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 591/18 — 1990 ජනවාරි 05 වැනි සිකුරාදා — 1990.01.05

591/18 ஆம் இலக்கம்—1990 ம் ஆண்டு சனவரி மாதம் 05 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

ச.வ.பி 21/78 II

### 1978ம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1989ம் ஆண்டின் 3 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23(2) ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ.எஸ். கருணாரத்ன,
பதிற் செயலாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, 1989 திசெம்பர் 27.

### கட்டளைச் சட்டம்

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**01.** இக் கட்டளைச் சட்டம் 1990 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கைத்திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இது 1990 ஜனவரி 01 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1987 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தை நீக்கஞ் செய்தல்.*

**02.** 1987 மார்ச் 27 ஆம் தேதி 446/19 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப் பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டம் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

*திறந்த பல்கலைக் கழகத்தைத் தாபித்தல்.*

**03.** (1) 1980, மே மாதம் 8 ஆம் தேதிய 87/10 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின்கீழ் திறந்த பல்கலைக்கழகக் கட்டளை வலுவுக்கு வருவதன்மீது (இதனகத்துப் பின்னர் "திறந்த பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது சட்டத்தின் 28(1) ஆம் பிரிவின்கீழ் ஒரு பல்கலைக்கழகத்தால் செய்யப்படுவதற்குத் தத்துவமளிக் கப்பட்ட எல்லா விடயங்களையும் அத்தகைய பெயரானும் அத்தகைய பெயரிலும் செய்வதற்கான முழுத் தத்துவத்துடனும் அதிகாரத்துடன் தாபிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளினால் திறந்த பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பட்ட தத்துவங்கள் இக்கட்டளைச் சட்டத்தால் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தா வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, அதன் பேரவையா பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் தத்துவங்கள்

04. இச் சட்டத்தினதும், திறந்த பல்கலைக்கழகக் கட்டளையின்தும் ஏற்பாடுகளுக்கும் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுக்கும் அமைய, திறந்த பல்கலைக் கழகம் பின்வரும் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) மாணவர்களை அனுமதித்தல் ;

(ஆ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் திறந்த பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கற்கைக் கிளையில் அல்லது கிளைகளில் போதனைக்கு ஏற்பாடு செய்தலும் இந்நோக்கத்திற்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு கல்வி நிறுவனங்களுடன், திறந்த பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் ஒத்துழைத்தலும் ;

(இ) வெவ்வேறு கல்விப் பிரிவுகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களின் தேர்ச்சி அளவை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கென தேர்வுகளை நடத்துதல் ;

(ஈ) ஆசிரியர்களையும் மாணவர்களையும் கல்விமான்களையும் பரிமாற்றம் செய்வதன் மூலம் அல்லது வேறு வகையில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் திறந்த பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது பொருளளவில் அவற்றையொத்த குறிக்கோள்களையுடைய வேறு பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் ;

(உ) துணைவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறு திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள ஆட்களுக்குப்பட்டங்களையும், டிப்புளோமாக்களையும் அளித்தலும் வழங்குதலும் ;

(ஊ) மூதவையால் விதந்துரைக்கப்பட்டு திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்கு கௌரவப் பட்டங்களை அல்லது வேறு கல்விச் சிறப்புக்களையும் வழங்குதல் ;

(எ) திறந்த பல்கலைக்கழகத்திற்கு அனுமதிகோரும் ஆட்கள் அல்லது அதன் மாணவர்கள் வேறு கல்வி நிறுவனங்களில் சித்தியடைந்த பரீட்சைகளையும் கற்கைக் காலப் பகுதிகளையும் திறந்த பல்கலைக்கழகத்தில் அல்லது அதன் அத்தகைய பாகத்தில் துணை விதியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பரீட்சைகளையும் கற்கை அல்லது படிப்பு காலப் பகுதிகளையும் ஒத்திருப்பவையாக அங்கீகரித்தலும் அத்துடன், அத்தகைய அங்கீகாரத்தை ஏதேனும் நேரத்தில் கைவாங்குதலும் ;

(ஏ) திறந்த பல்கலைக்கழகத்தின் நோக்கத்திற்கென நூலகங்களையும், ஆய்வுகூடங்களையும் போதனை அல்லது உறைவிட நோக்கங்களுக்கான வேறு கட்டிடங்களையும் நிறுவுதலும், சாதனங்களை ஏற்பாடு செய்தலும் பேணுதலும் ;

(ஐ) பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும் அல்லது விரிவுரையாளர் பதவிகளையும் திறந்த பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான வேறு பதவிகளையும் நிறுவுதல் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு, விதப்புரை செய்தல் ;

(ஒ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும் வேறு பரிசில்களையும் ஏற்படுத்தி வழங்குதல் ;

(ஓ) திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் அத்துடன் வேறு ஊழியர்கள் ஆகியோரின் உறைவிடத்தையும், ஒழுக்காற்றையும் நல்வாழ்வையும் ஒழுங்குபடுத்துதலும் ஏற்பாடு செய்தலும் ;

(ஔ) உறைவிட மண்டபங்களைத் தாபித்து முகாமை செய்தலும், மாணவர்களுக்கு உறைவிட வசதிகளை ஏற்பாடு செய்யும் உறையாக இல்லங்களுக்கு உரிமமளித்தலும், பல்கலைக்கழக மாணவர்களின் உறைவிடத்துக்கு அவசியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் ;

(க) பொதுமக்களுக்கு விசாலிப்பு சேவைகளையும் சேவைக்காலப் பயிற்சி நெறிகளையும் அவற்றை ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கு இணங்க ஏற்பாடு செய்தல் ;

(ங) துணைவிதியால் விதந்துரைக்கப்படக்கூடியவாறு திறந்த பல்கலைக்ககத்திற்கு வெளியேயுள்ள கல்வி நிறுவனங்களில் கற்கை நெறிகளை அல்லது அவற்றின் பாகங்களை ஒழுங்கு செய்தல் ;

(ச) துணைவிதியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் கீழ், கட்டணங்களைக் கோருதலும் பெறுதலும் ;

(ஞ) திறந்த பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு தேவைப் படக்கூடிய அத்தகைய வேறு செயல்களையும் காரியங்களையும் (அவை மேற் சொல்லப்பட்ட தத்துவங்களுக்கு இடைநேர்விளைவானவையாகவிருப்பினுஞ்சரி, அவ்வாறில்லாதிருப்பினுஞ்சரி) செய்தல் ;

பல்கலைக்கழக வேந்தர்

05. திறந்த பல்கலைக்கழகத்தின் வேந்தரை சனாதிபதி பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். பல்கலைக்கழக வேந்தரானவர் திறந்த பல்கலைக்கழகத்தின் தலைவராக இருத்தல் வேண்டும். என்பதுடன் அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகித்தலும் வேண்டும். அவர் சமூகமாயிருக்கும்போது, திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்;

பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்

06. பின்வருவோர் திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும்:—

(அ) துணைவேந்தர் ;

(ஆ) பிரதித் துணைவேந்தர் : எவரேனும் இருப்பின் ;

(இ) ஒவ்வொரு துறையினதும் துறைத்தலைவர் ;

(ஈ) கல்வித் தொழினுட்பவியற் பணிப்பாளர் ;

(உ) பிரதேசக் கல்விச் சேவைப் பணிப்பாளர், அத்துடன்

(ஊ) பதிவாளர் ;

(எ) நூலகப் பொறுப்பாளர் ;

(ஏ) நிதியாளர் ; அத்துடன்

(ஐ) எந்தப் பதவியை வகிப்பவர் இப் பந்தியின் நோக்கத்திற்காக அலுவலரொருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியென ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பதவி எதனையும் வகிப்பவர்

துணை வேந்தர்.

07. (1) (அ) திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அப்பல்கலைக்கழகத்தின் பேரவையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து ஆணைக் குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் பதவியிலிருந்து சனாதிபதியினால் அகற்றப்படலாம்.

(2) துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் பேரவை, மூதவை ஆகிய இரண்டின் பதவிவழி உறுப்பினராகவும், தவிசாளராகவும் இருத்தல் வேண்டும். துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் வேறேதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழுவின் கூட்டம் எதனையும் கூட்டுவதற்கும் அதில் சமூகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால், அவர் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராகவிருந்தாலொழிய, அத்தகைய கூட்டமெதிலும் வாக்களிக்க உரித்துடையவராகார்.

(3) பேரவையால், அதன் சார்பில் துணைவேந்தருக்குக் காலத்துக்குக் காலம், சட்டமுறையாக இடப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கு இணங்க, சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் அவை திறந்த பல்கலைக்கழகத்திற்குத் தொடர்புறுகின்றவாறான அளவுக்கு

முறையாகக் கடைப்பிடிக்கப்படுதலை உறுதி செய்தல் அவரது கடமையாதல் வேண்டும் ; அத்துடன், அந் நோக்கத்துக்காக அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் அவற்றைப் பிரயோகிக்கலாம்.

(4) இச் சட்டத்தினதும் அத்துடன் இக் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையினதும் மூதவையினதும் முடிபுகளுக்குப் பயனளித்தல், அல்லது பயனளிக்கப்படுதலை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமையாதல் வேண்டும்.

(5) துணைவேந்தரே, திறந்த பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(6) துணைவேந்தர்—

(i) திறந்த பல்கலைக்கழகம் தொடர்பில் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை நெறிகளையும் நெறிமுறைகளையும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் அத்தகைய கொள்கை நெறிகளுக்கு அமைய திறந்த பல்கலைக்கழகத்தின் நிருவாகம் உட்பட அதனை இயக்குவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(ii) திறந்த பல்கலைக்கழகத்தினுள்ளே ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(7) துணைவேந்தர், அவர் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அல்லது இப்பந்தியின் (i) ஆம் உப்பந்தியின் (ஆ) என்னும் வாசகத்தின்கீழ் பதவியில் இருந்து அகற்றப்பட்டாலொழிய மூன்றாண்டுக் காலத்துக்கு, அல்லது அவர் அறுபத்தைந்து வயதை நிறைவு செய்யும் வரையில், இவற்றில் எது முன்னதாக நடைபெறுகின்றதோ அதுவரை, பதவி வகித்தல் வேண்டும்.

(8) துணைவேந்தர், லீவு காரணமாக, சுகயீனம் காரணமாக இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தம் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், பிரதித் துணைவேந்தர் எவரேனும் இருப்பின், அவர் அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். பிரதித் துணைவேந்தர் எவரும் இல்லாதிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை நிகழ்ந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு அப்பதவிக்கான கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதெனக்கருதும் அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

(9) துணைவேந்தர் பதவியில் வெற்றிடம் எதுவும் ஏற்படின் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நிரந்தர நியமனம் ஒன்று செய்யப்படும்வரை—

(i) பிரதித் துணைவேந்தர் எவரேனும் இருந்தால் அவர் துணை[illegible]ந்தர் பதவிக்குரிய கடமைகளைப் புரிதல் வேண்டும், அல்லது

(ii) பிரதித் துணைவேந்தர் எவரும் இல்லாதவிடத்து, அ[illegible]கைய வெற்றிடம் நிகழ்ந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, அப்பத[illegible]கான, கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூ[illegible] அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

(10) பதவியை வறிதாக்கும் அல்லது இப்பந்தியின் (1) ஆம் உப்பந்தியின் (ஆ) என்னும் வாசகத்தின்கீழ் பதவியில் இருந்து நீக்கப்படும் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் துணைவேந்தராகப் பதவி வகிக்காதொழியும் துணை வேந்தரொருவர் மீண்டும் நியமிக்கப்பட்டாலொழிய அவர் துணை வேந்தராக நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாள் உயர்கல்வி நிறுவகம் ஒன்றின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராக இருந்திருந்தால், அவர் தம்முடைய அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்திசெய்திருக்காதிருப்பின் அத்தகைய நிறுவகத்தின் பணியாட்டொகுதியில் தம்நிலையான பதவிக்கு மீண்டும் செல்லாம்.

பிரதித் துணை வேந்தர்கள்.

08. பேரவையானது அதன் தற்றுணிபின் பேரிலும் ஆணைக்குழுவின் [illegible] அங்கீகாரத்தோடும் பிரதித் துணைவேந்தர் ஒருவரை, 1984 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பிரதித் துணைவேந்தரின் நியமனத்திற்கான நடவடிக்கைமுறைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நியமிக்கலாம்.

179

9. சட்டத்தின் 37 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் "பல்கலைக்கழகம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக அப்பிரிவில் அச்சொல்லமைப்பு காணப்படு மிடங்களிலெல்லாம் "திறந்த பல்கலைக் கழகம்" என்னும் சொல்லமைப்பு இடப்பட வேண்டும். என்ற திரிவுபடுத்துதலுக்கமைய, திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும். பதிவாளர்.

10. சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் "பல்கலைக்கழகம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக அப்பிரிவில் அச் சொல்லமைப்பு காணப்படுமிடங்களிலெல்லாம் "திறந்த பல்கலைக்கழகம்" என்னும் சொல்லமைப்பு இடப்பட வேண்டும் என்ற திரிபுபடுத்துதலுக்கமைய, திறந்த பல்கலைக் கழகத்தின் நிதியாளருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும். நிதியாளர்.

11. இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் "பல்கலைக்கழகம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக அப்பிரிவில் அச்சொல்லமைப்பு காணப்படுமிடங்களிலெல்லாம் "திறந்த பல்கலைக்கழகம்" என்னும் சொல்லமைப்பு இடப்பட வேண்டும் என்ற திரிபுபடுத்துதலுக்கமைய, திறந்த பல்கலைக்கழகத்தின் நூல் நிலையப் பொறுப்பாளருக்கு அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும். நூலகப் பொறுப்பாளர்.

12. திறந்த பல்கலைக்கழகத்தின் அதிகார சபைகள் பின்வருவன வாதல் வேண்டும்— திறந்த பல்கலைக்கழகத்தின் அதிகார சபைகள்

(அ) பேரவை ;

(ஆ) மூதவை ;

(இ) துறைச்சபை அல்லது துறைச்சபைகள் ;

(ஈ) அத்தகைய அதிகார சபைகளாக இருக்கவென கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

13. (1) திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையானது (இது இக்கட்டளைச் சட்டத்தின் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும். ) திறந்த பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுக்குழுவாகவும் ஆளும் அதிகார சபையாகவும் இருத்தல் வேண்டும்.

(2) பேரவை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) துணைவேந்தர் ;

(ii) பிரதித் துணைவேந்தர் ; எவரேனுமிருப்பின் ;

(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத்தலைவர் ;

(iv) தமது உறுப்பினர்களிடையேயிருந்து மூதவையினால் பெயர் குறித்துக் கப்பட்ட இரு பிரதிநிதிகள்

(v) சட்டத்தின் 124 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதான துணைவேந்தர்களினதும் பணிப்பாளர்களினதும்குழுவால் நியமிக்கப்பட்ட ஒரு துணைவேந்தர் ;

(vi) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(vii) ஒலிபரப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ; அத்துடன்

(viii) மேலேயுள்ள (i), (ii), (iii) (iv) என்னும் வாசகங்களின் கீழ் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையுடன் ஒன்றைக் கூட்டிவரும் எண்ணிக்கைக்குச் சமனானதான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், அத்தகைய உறுப்பினர்கள் எல்லோரும் கல்வி, உயர் தொழில், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞானம் அல்லது நிருவாகம் என்னும் துறைகளில் பாராட்டிற்குரிய சேவை புரிந்துள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (2), (3), (4), (5), (6), (7), (8), (9), என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பேரவைக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

14. (1) இச் சட்டத்தினதும் இக் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, இக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பந்தியின் கீழ் திறந்த பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்ட, அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும். பேரவையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

(2) ஓராம் உப்பந்தியினல் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பேரவையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்—

(i) திறந்த பல்கலைக்கழகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும் கட்டுப்படுத்துலும் நிர்வகித்தலும் ;

(ii) திறந்த பல்கலைக்கழகத்திற்கென மரபுச் சின்னமொன்றைத் தெரிவு செய்தலும் திறந்த பல்கலைக்கழகத்தின் பொது இலச்சினையின் வடிவத்தைத் தீர்மானித்தலும் கட்டுக்காவலுக்கு ஏற்பாடு செய்தலும் அதனைப் பயன்படுத்துமாறு பணித்தலும் ;

(iii) இச் சட்டத்தினதும் இக் கட்டளைச் சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க திறந்த பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் ஒழுங்கு படுத்துதலும் தீர்மானித்தலும் ;

(iv) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கென திறந்த பல்கலைக்கழகத்தின் கையடையில் வைக்கப்பட்ட எவையேனும் நிதிகளை நிர்வகித்தல் ;

(v) திறந்த பல்கலைக்கழகத்திற்கு மரணசாதனக் கொடைகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் வழங்கல் மூலமும் கிடைக்கும் ஆதனத்தை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக்கொள்ளுதலும் ஏற்றுக்கொள்ளுதலும் ;

(vi) திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் பரிசீலனை செய்தலும் அவசியப்படின் திருத்துதலும் அங்கிகரித்தலும் ஆணைக் குழுவுக்கு அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் சமர்ப்பித்தலும் ;

(vii) பல்கலைக்கழகத்தின் நிதிமதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும் ;

(viii) எக் கருமங்கள் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகார மளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்களுக்கென துணைவிதிகளை ஆக்குதல் ;

(ix) திறந்த பல்கலைக்கழகத்தின் வேறு ஏதேனும் அதிகார சபையால் ஆக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படாத அத்தகைய ஒழுங்குவிதிகளை ஆக்குதல் ;

(x) திறந்த பல்கலைக்கழகத்தின் வேலையைக்கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள் சாதனங்கள் வேறுபொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல் ;

(xi) திறந்த பல்கலைக்கழகத்திற்கு ஆட்களை நியமித்தலும் பல்கலைக்கழகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை நிறுத்தி வைத்தலும், விலக்குதலும் அல்லது வேறுவகையில் தண்டித்தலும் ; ஆயினும் அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விடயத்தில் தவிர, இந்தத் தத்துவங்கள் துணைவேந்தருக்குக் கையளிக்கப்படலாம்.

(xii) மூதவையின் விதப்புரைகளைப்பரிசீலனை செய்தபின்னர்திறந்தபல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலிருந்தோ அல்லது வேறெங்குமிருந்தோ தேர்வாளர்களை நியமித்தலும் அத்தகைய தேர்வாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய எவையேனும் கட்டணங்களைத் தீர்மானித்தலும் ;

(xiii) திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் பொது நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நலன்புரி சபையொன்றை நியமித்தல், அத்தகைய சபையின் உறுப்பாண்மை அமைப்பும், தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் துணை விதிகளினல் விதித்துரைக்கப்பட வேண்டும்.

(xiv) மூதவையின் விதப்புரையின்மீது, திறந்த பல்கலைக்கழகத்தில் கற்பித்தல், ஆராய்ச்சி, மற்றும் விசாலிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவசியமானதெனக் கருதப்படக்கூடியவாறன அத்தகைய துறைகளையும் கற்கைப் பிரிவுகளையும் தாபித்தல் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குதல் ;

(xv) மூதவையிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளைப் பரிசீலனை செய்த பின்னர் உளதாம் கற்கைப் பிரிவுகளை மீள ஒழுங்குமைத்தலுக்கும் புதிய கற்கைப் பிரிவுகளை ஒழுங்கமைத்தலுக்குமான செயற்திட்டங்களை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் ;

(xvi) திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு கல்வித் தொழில் நுட்பியலை திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான போதனைப் பொருடகளின் உற்பத்திக்கும் கல்வித் தொழினுட்பவியற் சபையொன்றை நியமித்தல் அத்தகைய சபையின் உறுப்பாண்மை அமைப்பு, கடமைகள், பணிகள் என்பன துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(xvii) பிரதேச கல்விச் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் பிரதேச கல்விச் சேவைகள் சபையொன்றை நியமித்தல். அத்தகைய சபையின் உறுப்பாண்மை அமைப்பு, கடமைகள் பணிகள் என்பன துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(xviii) திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பில் எவையேனும் ஒப்பந்தங்களைச்செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும், இல்லாதொழித்தலும் பயன்படுத்தப் படாத எதேனும் வருமானம் உட்பட பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் நம்பிக்கைப் பொறுப்பு பணங்களை அப் பிணைப்பொறுப்புகளில் முதலீடுசெய்தல் சட்டமுறையானதோ அப்பிணைப்பெறுப்பு எதிலும் முதலீடு செய்தலும் ; அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு அத்தகைய எவை யேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறு படுத்துதலும் அல்லது உடனடிச்செலவினத்துக்கு தேவைப்படாததான அத் தகைய பணங்களின் எதேனும் பகுதியை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும் ;

(xix) மூதவையைக் கலந்தாலோசித்தபின்னர், திறந்த பல்கலைக்கழகத்தின் வேந் தர், அலுவலர்கள், பட்டதாரிகள், மாணவர்கள் ஆகியோரின் கல்வி உடையை அல்லது விருதுச் சின்னத்தை அல்லது இரண்டையும் பற்றித் தீர்மானித்தல் ;

(xx) மூதவையுடன் கலந்தாலோசித்து கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அல்லது நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித் தல் ;

(xxi) பின்வருவன பற்றி ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தல்:—

(அ) மூதவையுடன் கலந்தாலோசித்து, பேராசிரியர் பதவிகள், இணைப் பேரா சிரியர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் அத்துடன் வேறு எதேனும் கல்வித்துறைசார் பதவி ஆகியவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல் அல்லது நிறுத்தி வைத்தல் ;

(ஆ) கல்வித்துறைசாராப் பதவி எதனையும் நிறுவுதல், இல்லாதொழித்தல், அல்லது நிறுத்தி வைத்தல் ; அத்துடன்

(இ) திறந்த பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், அலுவலர்கள், வேறு ஊழியர் கள் ஆகியோரது தகைமைகள்.

(xxii) சட்டத்தால், இக் கட்டளைச் சட்டத்தால் அல்லது வேறு எதேனும் தோதான சாதனத்தால் பிரயோகிக்கப்படுவதற்கு வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாத வையான, திறந்த பல்கலைக்கழகத்தின் வேறெல்லாத் தத்துவங்களையும் பிர யோகித்தல் ;

ஆயினும் எதேனும் கல்வித்துறைக் கருமம் பற்றி மூதவை அதன் அபிப்பிராயத்தைப் பதியவும் பேரவைக்கு அனுப்பிவைக்கவும் முதலில் அதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந் தாலொழிய அக்கல்வித்துறைக் கருமம் தொடர்பில் தீர்மானம் எதுவும் பேரவையால் நிறை வேற்றப்படுதலாகாது. இக்காப்பு வாசகத்தில் "கல்வித்துறைக் கருமம்" என்பது மூதவையின் கட்டுப்பாட்டிற்குள்ளும் பொதுப்பணிப்பிற்குள்ளும் உள்ள எதேனும் கருமம் எனப் பொருள்படும்.

15. (1) (இக் கட்டளைச் சட்டத்தின் "மூதவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூதவை திறந்த பல்கலைக்கழகத்தின் ஒரு மூதவை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி சார் அதிகார சபையாக இருத்தல் வேண்டும்.

(2) மூதவை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) துணைவேந்தர் ;

(ii) பிரதித்துணைவேந்தர், எவரேனுமிருப்பின் ;

(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத்தலைவர் ;

(iv) கல்வித்தொழினுட்பவியற் பணிப்பாளர் ;

(v) ஒவ்வொரு கற்கைப் பிரிவுகளினதும் தலைவர் ;

(vi) பல்கலைக்கழகத்தின் நிரந்தரப் பேராசிரியர் ஒவ்வொருவரும் ;

(vii) நூலகப் பொறுப்பாளர் ; அத்துடன்

(viii) இந்த உட் பந்தியின் முற்போந்த வாசகங்களில் குறிப்பீடு செய்யப்பட்டவர் களல்லாதவர்களும் ஒவ்வொரு துறையினதும் நிரந்தர ஆசிரியர்களால் அவர் களது எண்ணிக்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆசிரியர்கள்.

(3) ஒவ்வொரு துறையிலுமுள்ள நிரந்தர ஆசிரியர்களால் அவ்வெண்ணிக்கையினரிடையே யிருந்து தெரிவு செய்யப்பட்ட இரு ஆசிரியர்களும் அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆயின் எவ்வாறுயினும் அத்தகைய எவரேனும் ஆசிரியர் இளைப்பாறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது மூதவையின் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாகச் சமுகமளிக்காததன் காரணமாக வேறு வகையில் பதவியை வறிதாக்குமிடத்து (2) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் வாசகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது இடத்துக்கு வேறோர் உறுப்பினர் தெரிவு செய்யப் படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆசிரியர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அவரது முன்னமைந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாத பகுதிக்குப் பதவி வகித்தல் வேண் டும்.

(4) மூதவையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மை யின் மூன்றிலொரு பங்காதல் வேண்டும்.

(5) திறந்த பல்கலைக்கழகத்தில் கற்பித்தல், கல்வி, ஆராய்ச்சி, தேர்வு ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் மூதவை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) சட்டத்தினதும் இக்கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமையவும், (5) ஆம் உட்பந்தியினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் மூதவை பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;—

(i) சம்பந்தப்பட்ட துறைச் சபையின் அல்லது துறைச்சபைகளின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது நெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான ஒழுங்கு விதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளை அங்கீகாரத்துக்கென பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ii) சம்பந்தப்பட்ட துறைச் சபையின் அல்லது துறைச் சபைகளின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர் தேர்வாளர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களை பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(iii) திறந்த பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவிகளையும் இணைப் பேராசிரியர் பதவிகளையும் சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும் விரிவுரையாளர், பதவிகளையும் வேறு கல்வித் துறைசார் பதவிகளையும் உருவாக்குதல், இல்லாதொழித்தல் அல்லது நிறுத்திவைத்தல் என்பன பற்றிப் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(iv) சம்பந்தப்பட்ட துறைச்சபையின் அல்லது துறைச்சபைகளின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர், பேரவைக்கு பின்வருவனவற்றை விதப்புரை செய்தல் :—

(அ) உளதாம் துறைகளையும் கற்கைப் பிரிவுகளையும் மீள ஒழுங்கமைத்த லுக்கும் புதிய துறைகளையும் கற்கைப் பிரிவுகளையும் ஒழுங்கமைத்த லுக்குமான நிகழ்ச்சித் திட்டங்கள் ; அத்துடன்

(ஆ) கற்கைப் பிரிவுகளை முறையே அவற்றுக்கான துறைகளுக்குக் குறித்தொதுக்குதல் ;

(v) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியவற்றுக்கான போட்டியை நடாத்தும் முறைபற்றியும் அதற்கான நிபந்தனைகள் பற்றியும் பேரவைக்கு விதப்புரை செய்தல் ;

(vi) பேரவையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள் மீது ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும் பதக்கங்களையும் வேறு பரிசில்களையும் வழங்குதல் ;

(vii) தகுந்ததென மூதவை கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவளவான மூதவையினது நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக்குழுக்களை அல்லது சபைகளை நியமித்தலும் ; அத்துடன் குறிப்பாக,

(அ) நூலகக் குழு ;

(ஆ) அனுமதிப்புக் குழு ;

(இ) ஆராய்ச்சிக்குழு ;

(ஈ) பாடவிதானமும் மதிப்பீடுகளும் பற்றிய குழு ; அத்துடன்

(உ) தகுதிகாண் காலக் கற்கை லீவுக்குழு.

ஆகிய குழுக்களை நியமித்தலும் அவற்றின் அலுவல் நியதிகளைக் குறித்துரைத்தலும் ; அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தலும் ; அத்தகைய அறிக்கைகளை, திரிபுகளுடனோ அல்லது திரிபுகளின்றியோ ஒன்றில் அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிரயகரித்தலும் ;

(viii) கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைப் பற்றிப் பேரவைக்கு விதப்புரை செய்தல் ;

(ix) அந்தந்த கற்கைத் துறைகளுக்கு பயிற்சிநெறிக்குழுக்களின் நியமனத்தை விதந்துரைத்தல் ; அத்துடன்

(x) வெவ்வேறு கற்கைநெறிகளுக்குமான கல்வித்தொழினுட்பவியல் முறைகள் பற்றிக் கல்வித் தொழினுட்பவியற் சபையின் பிரேரணைகளைப் பரிசீலனை செய்தலும் அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய முறைகளை பேரவையின் அங்கீகாரத்துக்கென விதந்துரைத்தலும்.

16. (1) திறந்த பல்கலைக்கழகம் பின்வரும் பீடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(அ) மானிடவியல் சமூகவிஞ்ஞானபீடம் ;

(ஆ) இயற்கை விஞ்ஞான பீடம் ; அத்துடன்

(இ) பொறியியல் தொழினுட்பவியல் பீடம்.

(2) மானிடவியல், சமூகவிஞ்ஞானபீடம் பின்வரும் கற்கைப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(i) கல்வி

(ii) சட்டக்கற்கைகள்

(iii) மொழிக்கற்கைகள்

(iv) முகாமைத்துவக் கற்கைகள்

(v) சமூகக் கற்கைகள் ; அத்துடன்

(vi) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் பிரிவு

(3) இயற்கை விஞ்ஞான பீடம் பின்வரும் கற்கைப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(i) கணிதம்

(ii) இரசாயனவியல்

(iii) பௌதிகவியல்

(iv) விலங்கியல்

(v) தாவரவியல்; அத்துடன்

(vi) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் பிரிவு.

(4) பொறியியல் தொழினுட்பவியல் பீடம் பின்வரும் கற்கைப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(i) குடியியற் பொறியியல்

(ii) மின்சார, கணணிப் பொறியியல்

(iii) எந்திர நுட்பப் பொறியியல்

(iv) கணணிக் கற்கைகள்

(v) புடவைத் தொழினுட்பவியல் ; அத்துடன்

(vi) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் பிரிவு

(5) கற்கைப் பகுதியொன்றின் தலைவர் துணைவேந்தரின் விதப்புரையின்பேரில் பேரவையால் நியமிக்கப்பட்ட ஒரு பேராசிரியராக, இணைப் பேராசிரியராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக இருத்தல் வேண்டும்.

ஆயினும் பகுதியொன்றின் தலைவர், பேரவையால் நியமிக்கப்பட்டிராதவிடத்து பகுதியொன்றின் தலைவரது பதவியில் அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு செயலாற்றுவதற்கென ஒரு பேராசிரியரை, இணைப் பேராசிரியரை, சிரேஷ்ட விரிவுரையாளரை துணைவேந்தர் நியமிக்கலாம்.

(6) ஒரு பகுதியின் தலைவர், ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(7) லீவுபெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக, ஒரு பகுதியின் தலைவர் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, அத்தகைய காலத்துக்கு பகுதித்தலைவர் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்காக, அப்பகுதியைச் சேர்ந்த வேறொரு பேராசிரியரை, இணைப் பேராசிரியரை அல்லது சிரேஷ்ட விரிவுரையாளரைத் துணைவேந்தர் நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும் பகுதித்தலைவர் ஒருவர் ஓய்வு பெறும் அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது வேறு காரணத்துக்காக மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருக்குமிடத்து பகுதித்தலைவர் பதவியானது வறிதாகியுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் (5) ஆம் உட்பிரிவுக்கு இணங்க புதிய பகுதித்தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

துறைத்தலைவர்

17. (i) ஒவ்வொரு துறைக்கும் ஒரு துறைத்தலைவர் இருத்தல் வேண்டும். இவர் திறந்த பல்கலைக்கழகத்தில் முழுநேர அலுவலராகவும் அத்துறையின் கல்வித்துறைத்தலைவராகவும் நிருவாகத் தலைவராகவும் இருத்தல் வேண்டும். துறைத்தலைவர், துறைச்சபையால் பேராசிரியர்கள் இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையே தெரிந்தெடுக்கப்படல் வேண்டும்.

(ii) துறைத்தலைவர் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாட்டிற்கமைய அவர் நியமிக்கப்பட்ட தேதியில் இருந்து கணிக்கப்பட்ட தேதியில் இருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள நியமனம் பெறுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(iii) லீவு பெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகயீனம் காரணமாக அல்லது வேறு காரணத்திற்காக துறைத்தலைவர் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து அத்தகைய காலத்திற்கு துறைத்தலைவர் பதவியிற் பதிற் கடமையாற்றுவதற்காக, அத்துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து வேறோர் ஆளை துணைவேந்தர் நியமித்தல் வேண்டும்.

ஆயினும் துறைத்தலைவர் ஒருவர் ஓய்வு பெறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சும் காலப்பகுதியொன்றுக்கு அல்லது பதவிக்குரிய கடமைகளைப்புரிய இயலாதிருக்குமிடத்து அத்துறையின் துறைத்தலைவர் பதவி வெற்றானதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் (1) ஆம் உபபந்திக்கிணங்க புதிய துறைத்தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

18. (1) திறந்த பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு கற்கைப் பகுதியும் இக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்துறைக்குக் குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய பயிற்சிப் பிரிவுகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் துறைகளின் அமைப்பும் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

(2) திறந்த பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் பின்வரும் ஆட்களைக்கொண்ட துறைச் சபையைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(i) துறைத்தலைவர் ;

(ii) கல்வித்தொழினுட்பவியற் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iii) துறையில் அடங்கியிருப்பனவான கற்கைப் பகுதிகளின் எல்லா நிரந்தரப் பேராசிரியர்களும் இணைப் பேராசிரியர்களும் சிரேட்ட விரிவுரையாளர்களும் விரிவுரையாளர்களும் ;

(iv) துறையின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களிடையேயிருந்து அவர்களால் தெரிவு செய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

(v) (iii) ஆம் (iv) ஆம் வாசகங்களில் குறிப்பீடு செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, துறையில் கற்பிக்கும் நிரந்தரப்பணியாட்டொகுதியினரால் அவர்களிடையேயி ருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(vi) துறைக்கு இயைபான கற்கைத் துறைகளில் சிறப்புற்று விளங்குபவர்களும் திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களல்லாதவர்களு மான ஆட்களிடையேயிருந்து துறைச் சபையால் தெரிவு செய்யப்படுகின்றவர் களான மூன்று ஆட்கள் (இவர்களின் எண்ணிக்கை மூன்றுக்குக் குறையாமலும் ஐந்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்).

(3) சட்டத்தினதும் இக் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒரு துறைச் சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்—

(i) அதற்கு மூதவையால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்பற்றி பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்தல் ;

(ii) மூதவையின் கட்டுப்பாட்டுக்கமைவாக துறையில் உள்ள கற்கைப் பகுதிகளில் கற்பித்தல், தேர்வுகள், ஆராய்ச்சி என்பவற்றுடன் தொடர்புடைய கருமங்களை ஒழுங்குப்படுத்துதல்.

(iii) துறையில் உள்ள கற்கைப் பகுதிகளுடனும் பரீட்சைகளுடனும் தொடர்புடைய எல்லாக் கருமங்கள் பற்றியும் மூதவைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தல் ;

(iv) ஏதேனும் விசேட விடயம் பற்றி அல்லது எவையேனும் விசேட விடயங்கள் பற்றி பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக குழுக்களை நியமித் தல், அவற்றின் துறையின் உறுப்பினர்களாக அல்லாத ஆட்களும் இடம் பெறலாம் ;

(v) தேர்வாளர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களைக் மூதவைக்கு விதந்துரைத்தல்.

(4) சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைவரே தலைமைதாங்குதல் வேண்டும்.

துணைவிதிகள்.

**19.** சட்டத்தின் 135ஆம் பிரிவின் ஏற்பாடுகள் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகார சபையால் துணைவிதிகளை ஆக்குதலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**20.** சட்டத்தின் 136ஆம் பிரிவின் ஏற்பாடுகள் திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

விதிகள்.

**21.** சட்டத்தின் 137ஆம் பிரிவின் ஏற்பாடுகள் திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகார சபையால் அல்லது வேறு குழுவால் விதிகள் ஆக்கப்படுவதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா.

**22.** (1) திறந்த பல்கலைக்கழகம், பட்டங்கள் வழங்கும் நோக்கத்திற்காக வேந்தரால் அங்கிகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் பட்டமளிப்பு விழாவொன்றை ஆண்டுக்கொருமுறை நடாத்துதல் வேண்டும்.

ஆயினும் வேந்தர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு காலத்தில் சிறப்பாக பட்டமளிப்பு விழாவொன்றை நடாத்தலாம்.

ஆயினும் மேலும் பட்டமளிப்பு விழாவொன்று நடாத்தப்படாமலேயே முதற் பட்டங்கள் வழங்கப்படலாம்.

(2) பட்டமளிப்பு விழாவொன்றின் நடவடிக்கைமுறை மாதிரி என்பன துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி, சமுகமாயிருக்கும்போது பட்டமளிப்பு விழாவொன்றிற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். அவர் சமுகமாயில்லாதபோது வேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். சனாதிபதி, வேந்தர் ஆகிய இருவரும் சமுகமாயில்லாதபோது துணைவேந்தர் அவ்வாறு தலைமை தாங்குதல் வேண்டும்.

இக்கட்டளைச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படாத கருமங்கள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.

**23.** திறந்த பல்கலைக்கழகம் தொடர்பிலான ஏதேனும் கருமம் பற்றி இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து சட்டத்தின் இயைபான ஏற்பாடுகள் அத்தகைய கருமங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**24.** இக் கட்டளைச் சட்டத்தில்—

"சட்டம்" என்பது 1985ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம், 1988ஆம் ஆண்டின் இல. 24, 1988ஆம் ஆண்டின் இல. 26 1988ஆம் ஆண்டின் இல. 33, 1989 ஆம் ஆண்டின் இல. 3 ஆகிய சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருள்படும்.

"தோதான சாதனம்" என்பது சட்டத்தின் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச் சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி என்று பொருள்படும்.

"ஆணைக்குழு" என்பது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்; அத்துடன்

"சனாதிபதி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி என்று பொருள்படும்.

1–287

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.